(ஆ) அனைத்து துறைகளுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பதவி உயர்வின் போது கீழ்க்காணும் துறைகளில் குறிப்பிட்ட சில பதவிகளுக்கு மட்டும் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது :—

(1) வருவாய்த் துறை (துணை மாவட்ட ஆட்சியர் மற்றும் துணை வட்ட ஆட்சியர்) ;

(2) வணிகவரி துறை (வணிகவரி அலுவலர், உதவி வணிக வரி அலுவலர்) ;

(3) நெடுஞ்சாலை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை (உதவிப் பொறியாளர்) (நெடுஞ்சாலை) ;

(4) ஆவணப் பதிவுத்துறை (சார் பதிவாளர் II) பத்திரப் பதிவு) ; மற்றும்

(5) நில அளவை, நிலப் பதிவுருக்கள் (நில அளவையாளர் இளநிலை களிப் பொறியாளர் மற்றும் படிஎடுப்பு உதவியாளர்)

(ஆ) அனைத்து துறைகளுக்கும் விஸ்தரிப்பதுபற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது.

தாட்கோ தலைமை அலுவலகம்.

113—(*வினா எண் 12503) திரு. அ. பிரணவநாதன் மற்றும் திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ தலைமை அலுவலகத்தை விழுப்புரத்திலிருந்து சென்னைக்கு மாற்றும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.